**பிரஸார் பாரதி**
**அகில இந்திய வானொலி-சென்னை-4**
***01 08 2025 FRIDAY 12 40 PM***
**ஆகாஷவாணி - செய்திகள்**

## தலைப்புச் செய்திகள்

- ***சுதந்திர தின உரையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்த கருத்துக்களை பொதுமக்கள் பகிர்ந்து கொள்ளுமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.***
- ***லோக்மான்ய பாலகங்காதர திலகரின் நினைவுதினத்தை ஒட்டி, தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.***
- ***எதிர்க்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக நாடாளுமன்ற நடவடிக்கைகள் இன்றும் பாதிக்கப்பட்டன.***
- ***பீகாரில் பள்ளிகளில் பணியாற்றும் சமையலர்கள், உடற்கல்வி பயிற்சியாளர்களின் மதிப்பூதியம் இருமடங்கு உயர்த்தி வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் அறிவித்துள்ளார்.***
- **Macau** ***ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tharun Mannepalli அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.***

>>>>>><<<<<<

சுதந்திர தின உரையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்களது கருத்துகளை தெரிவிக்குமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

***இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில்*** **mygov** இணையதளம் மற்றும் 'நமோ' செயலி வாயிலாக ***பொதுமக்கள் தங்களது கருத்துக்கள் மற்றும் யோசனைகளை பகிர்ந்து கொள்ளுமாறு குறிப்பிட்டுள்ளார்.***

>>>>>><<<<<<

***சுதந்திரப் போராட்ட வீரர்,*** லோக்மான்ய பாலகங்காதர திலகரின் நினைவு தினத்தை ஒட்டி, ***அவருக்கு*** மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மரியாதை சேலுத்தியுள்ளார்.

***இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சுயராஜ்யத்தை மக்கள் இயக்கமாகவும், சுதேசி இயக்கத்தை மக்களின் உணர்வாகவும் மாற்றியவர் திலகர் என்று குறிப்பிட்டுள்ளார்.***

***மேலும், நமது கலாச்சாரத்தை மேம்படுத்தியதுடன், தேசத்திற்கு பெருமிதம் தேடித் தந்தவர் என்றும் அவர் கூறியுள்ளார்.***

***விநாயகர் சதுர்த்தி மற்றும் சத்ரபதி சிவாஜி பிறந்த நாள் கொண்டாட்டங்கள் வாயிலாக, சமூக ஒற்றுமையை ஏற்படுத்தவும், தீண்டாமையை ஒழிக்கவும் அரும்பாடுபட்டவர் திலகர் என்று திரு. அமித் ஷா புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.***

***இந்நாளையொட்டி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், சிறந்த தேசியவாதியான பாலகங்காதர திலகரை இந்நாளில் நினைவுகூருவோம் என்று தெரிவித்துள்ளார்.***

***அச்சமற்ற சுதந்திரப் போராட்ட வீரரும், தொலைநோக்குப் பார்வை கொண்டவருமான திலகரின், சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதனை அடைந்தே தீருவேன் என்ற அவரது குரல் நாடுமுழுவதும் சுதந்திரப் போராட்ட உணர்வை தூண்டியதாகவும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.***

*>>>>>><<<<<<*

***எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக, நாடாளுமன்ற நடவடிக்கைகள் இன்றும் பாதிக்கப்பட்டன.***

***மக்களவை இன்று காலை கூடியதும், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்பி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால், அவை நடவடிக்கைகள் பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.***

***மாநிலங்களவையிலும் இதே பிரச்சினை காரணமாக, முதலில் நண்பகல் 12 மணி வரையிலும், பின்னர் நாள் முழுமைக்கும் அவை ஒத்தி வைக்கப்பட்டது.***

*>>>>>><<<<<<*

பீகாரில் பள்ளிகளில் பணியாற்றும் மதிய உணவுத் திட்ட சமையலர்கள், ***உடற்கல்வி பயிற்சியாளர்கள்*** மற்றும் இரவுக் காவலர்களின் ***மதிப்பூதியம் இரண்டு மடங்காக உயர்த்தி வழக்கப்படும் என்று*** அம்மாநில முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் அறிவித்துள்ளார்.

***இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மதிய உணவு திட்ட சமையலர்களின் மாதாந்திர மதிப்பூதியம் ஆயிரத்து 650 ரூபாயிலிருந்து, 3 ஆயிரத்து 300***

ரூபாயாகவும், மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இரவுக் காவலர்களின் ஊதியம் 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

உடற்கல்வி பயிற்சியாளர்களின் மாதாந்திர மதிப்பூதியம் 8 ஆயிரம் ரூபாயிலிருந்து 16 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுவதுடன், வருடாந்திர ஊதிய உயர்வு 200-லிருந்து 400 ரூபாயாக உயர்த்தி வழங்கபடும் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலத்தின் கல்வித்துறையை வலுப்படுத்துவதில் இவர்களது பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்று தெரிவித்துள்ள திரு. நிதிஷ்குமார், இந்த ஊதிய உயர்வு, அவர்கள் மேலும் அரப்பணிப்புடன் பணியாற்ற ஊக்கமளிக்கும் என்றும் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

17 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக்கடன் முறைகேடு வழக்கில், தொழிலதிபர் திரு. அனில் அம்பானிக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது.

அவர் வரும் 5ஆம் தேதி, தில்லியில் உள்ள அமலாக்கத்துறை தலைமையகத்தில் விசாரணைக்கு ஆஜராக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவர் நடத்தி வந்த தொழில் நிறுவனங்களில் அண்மையில் சோதனை மேற்கொண்ட அமலாக்கத்துறையினர் கைப்பற்றிய ஆவணங்களில் அடிப்படையில், அவருக்கு இந்த சம்மன் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

>>>>>><<<<<<

ஏழை குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் நோக்கில், மத்திய அரசு உஜ்வாலா திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தின் திருப்பூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ், வழங்கப்படும் இலவச சமையல் எரிவாயு தங்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தியிருப்பதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட்பைட் – பயனாளிகள் 43 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தென்மேற்குப் பருவமழை வரும் நாட்களில் இயல்பைவிட அதிகமாக பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில், 106 சதவீதத்திற்கும் அதிகமாக பருவமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குநர் திரு. மிருத்யுஞ்சய் மொஹபத்ரா கூறியுள்ளார்.*

*எனினும், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் அதனையொட்டிய கிழக்குப் பகுதிகளிலும், மத்திய பகுதியின் ஓரிரு இடங்களிலும், தென்மேற்குப் பகுதியிலும் இயல்புக்கும் குறைவான அளவே மழை பெய்யக்கூடும் என்றும் திரு. மொஹபத்ரா தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*முன்னாள் ராணுவத்தினரின் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.*

*தமிழகத்தின் திருப்பத்தூர் மாவட்டத்தில் பிரதமரின் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி தங்களது படிப்புக்கு பேருதவியாக உள்ளது என்று முன்னாள் படை வீரர்களின் வாரிசுகள் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் – வாரிசுகள் 36 செகண்ட்)*

*>>>>>><<<<<<*

*அமெரிக்காவில் செயல்படும் சர்வதேச மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், மருந்துகளின் விலையை குறைக்க வேண்டும் என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.*

*இதுதொடர்பாக அவர் 17 மருந்து தயாரிப்பு நிறுவனங்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், உலகின் பிற வளர்ந்த நாடுகளில் விற்கப்படும் மருந்துப் பொருட்களின் விலைக்கு இணையாக அமெரிக்காவிலும் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.*

*இந்திய நிறுவனங்கள் அல்லாத பிற நாடுகளில் உள்ள நிறுவனங்களுக்கு இந்த கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.*

*>>>>>><<<<<<*

*யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலில் 16 பேர் உயிரிழந்தனர், நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.*

*கிவ் நகரின் மீதான இந்த தாக்குதல், கடந்த மூன்றரை ஆண்டுகளில் நடத்தப்பட்ட மிக மோசமான தாக்குதல் என்று யுக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

*மீட்புப் பணிகளில் ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட காவல்துறையினர் மற்றும் அவசர கால பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதாக யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.*

*இதனிடையே, யுக்ரைனின் ராணுவத் தளங்களை குறிவைத்து மட்டுமே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் எந்த தாக்குதலும் நடத்தப்படவில்லை என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*லெபனானின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பினரின் இலக்குகளை குறிவைத்து, இஸ்ரேல் விமானங்கள் கடும் தாக்குதல் நடத்தியுள்ளன.*

*அந்நாட்டின் Bekaa பள்ளத்தாக்கு மற்றும் தென்பகுதியில் உள்ள ஆயுத உற்பத்தி நிலையங்கள் மற்றும் சேமிப்பு கிடங்குகளை குறிவைத்து இஸ்ரேல் விமானப்படை விமானங்கள் தாக்குதல் நடத்தியிருப்பதாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. Israel Kutz தெரிவித்துள்ளார்.*

*தாக்குதலுக்கு உள்ளான ஒரு இடம், ஹிஸ்புல்லா அமைப்பினரின் மிகப் பெரிய ஏவுகணை உற்பத்தி நிலையமாக செயல்பட்டு வந்தது என்றும் இஸ்ரேல் அமைச்சர் கூறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

**Macau** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ***Tharun Mannepalli*** *அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-12, 13-21, 21-18 என்ற செட்கணக்கில் சீனாவின் Zhe An Hu-வை வென்றார்.*

*>>>>>><<<<<<*

*அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச செலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் – ராம்குமார் ராமநாதன் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

***ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-6, 6-3 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Zachary – Wally Thayne இணையை வென்றது.***

*>>>>>><<<<<<*

பிரேசிலில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ***ஹர்மித் தேசாய் – Snehit இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.***

***ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 11-3, 9-11, 11-4, 6-11, 11-8 என்ற செட்கணக்கில் அர்ஜென்டினாவின் Santiago – ஆஸ்திரேலியாவின் Hwan Bae இணையை வென்றது.***

***இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில்*** இந்தியாவின் மனுஷ் ***ஷாவும், மகளிர் ஒற்றையர் பிரிவில் Yashaswini Ghorpade மற்றும் Ayhika Mukherjee-ம் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.***

*>>>>>><<<<<<*